தினமணி

"தேயிலை விவசாயிகளின் குறைதீர்க்க நடவடிக்கை'

First Published : 11 Apr 2011 11:56:57 AM IST

உதகை, ஏப். 10: நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயிகளின் குறைகளைத் தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பாஜக தேசியப் பொதுச் செயலர் அனந்தகுமார் கூறினார்.

உதகை தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் குமரனை ஆதரித்து ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசியது:

மத்தியில் பாஜக ஆட்சியிலிருந்தபோது, நீலகிரி மக்களவை உறுப்பினராக இருந்த மாஸ்டர் மாதன், அப்போதைய பிரதமர் வாஜபேயியை சந்தித்துப் பேசி, தேயிலை விவசாயிகளுக்காக மானியம் பெற்றுத் தந்தார்.

ஆனால், மீண்டும் தேயிலை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டபோது, மத்திய அரசும், தமிழக அரசும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலை விரைவில் மாறும். தமிழக தேர்தல் முடிந்தவுடன் காங்கிரஸ்-திமுக கூட்டணியில் பிளவு ஏற்படும். இதன் மூலம் மத்தியில் மீண்டும் தேர்தல் வருவதற்கும் வாய்ப்புள்ளது. அப்போது பாஜக ஆட்சிக்கு வரும். அதன் பின்னர் தேயிலை விவசாயிகளின் குறைகள் தீர்க்கப்படும்.

தமிழகத்தில் 1.5 கோடி பேர் வேலையில்லாமல் உள்ளனர். இவர்களில் 95 சதத்தினருக்கு வேலைவாய்ப்பு தருவதாக உறுதியளித்த கருணாநிதி, கடந்த 5 ஆண்டுகளில் தனது குடும்பத்தினரைத் தவிர வேறு யாருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கவில்லை. அதேபோல, மக்கள் நலத் திட்டங்களையும் நிறைவேற்றவில்லை. சாலை, பேருந்து வசதிகளின்றி மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

ராகுல்காந்தி பிரச்சாரத்துக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் காங்கிரஸ் கட்சி மோசமான தோல்வியைச் சந்திக்கிறது. அதைப்போலவே தமிழகத்திலும் காங்கிரஸ் கட்சி மிக மோசமான தோல்வியைச் சந்திக்கும் என்றார் அனந்தகுமார்.

கூட்டத்தில் நீலகிரி முன்னாள் எம்.பி. மாஸ்டர் மாதன், வேட்பாளர் குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 107.92 அடி**

First Published : 11 Apr 2011 10:52:23 AM IST

தஞ்சாவூர், ஏப். 10: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 107.92 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,152 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,400 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**ஒரத்தநாடு தொகுதியில் வேளாண் தொழில்சாலை**

First Published : 11 Apr 2011 10:48:21 AM IST

தஞ்சாவூர், ஏப். 10: ஒரத்தநாடு தொகுதியில் வேளாண்மை சார்ந்த தொழில்சாலை அமைக்க பாடுபடுவேன் என்றார் அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர். வைத்திலிங்கம்.

ஒரத்தநாடு அதிமுக வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான ஆர். வைத்திலிங்கம், திருவோணம் அடுத்த வெட்டிக்காடு கடைவீதியில் ஞாயிற்றுக்கிழமை வாக்கு சேகரித்துப் பேசியது:

வைக்கோலில் இருந்து காகிதம் தயாரிக்கும் தொழில்சாலையை இந்தப் பகுதியில் அமைக்க முயற்சிப்பேன். பாசன கட்டமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில், ஆற்றின் கரையோரங்களில் தேக்கு மரங்களை வளர்த்து செம்மைப்படுத்தியது போல, கடைமடை வரை காவிரி பாசனநீர் தடையின்றி செல்வதற்கு வழிவகுக்கும் நோக்கில் புனரமைப்புப் பணிகள் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்படும்.

கிராமப் பகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். வெள்ளக் காலங்களில் ஆறுகளில் உடைப்புகள் ஏற்பட்டு, வயல்களில் நீர் தேங்கி பயிர்கள் சேதமடைவதைத் தடுக்கும் நோக்கில், வடிகால்களில் தூர்வாரும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றார் வைத்திலிங்கம்.

தமிழ்நாடு பாடநூல் கழக முன்னாள் தலைவர் கு. தங்கமுத்து உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தினமலர்

**தேயிலை ஏற்றுமதி 11 சதவீதம் சரிவு**

ஏப்ரல் 12,2011,00:19



புதுடில்லி: சென்ற பிப்ரவரி மாதத்தில், நாட்டின் தேயிலை ஏற்றுமதி, 11 சதவீதம் சரிவடைந்து, 1.19 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டு இதே மாதத்தில், 1.33 கோடி கிலோவாக இருந்தது. @தயிலை உற்பத்தியாகும் முக்கிய வடமாநிலங்களில் Œõதகமற்ற பருவ நிலையால் @தயிலை உற்பத்தி குறைந்து போனது.இ@த மாதங்களில், நாட்டின் தேயிலை ஏற்றுமதியில் வடமாநிலங்களின் பங்களிப்பு, 22.20 சதவீதம் குறைந்து, 84 லட்சம் கிலோவிலிருந்து 66 லட்சம் கிலோவாக குறைந்துள்ளது.அ@த Œமயம்,தேயிலை ஏற்றுமதியில்,தென்னிந்திய மாநிலங்களின் பங்களிப்பு 9.41 சதவீதம் அதிகரித்து, 53 லட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது. கடந்தாண்டின் இதே மாதத்தில், இம்மாநிலங்களின் பங்களிப்பு 48 லட்சம் கிலோவாக இருந்தது என, தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வரத்து அதிகரிப்பால் பூக்கள் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2011,22:03 IST

விருதுநகர் : விருதுநகர் மார்க்கெட்டில் காய்கறிகள் கிலோவில் கத்தரிக்காய், வெண்டைக்காய், பீட்ரூட், பூசணிக்காய் தலா 12 ரூபாய், தக்காளி 7, பாகற்காய், சேம்பு, இஞ்சி தலா 36, பீர்க்கங்காய், கேரட், மாங்காய், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, முருங்கைக்காய் தலா 24,

அவரைக்காய், சேனை தலா 30, முள்ளங்கி, உருளை கிழங்கு, காளி பிளவர் தலா 20, பட்டாணி, பட்டர் பீன்ஸ் தலா 80, பச்சை மிளகாய் 40 ரூபாய்.

சிவப்பு பீன்ஸ், அதலைக்காய் தலா 60, சீனிவரைக்காய் 16, சவ்சவ் 22, புடலங்காய், பல்லாரி, முட்டை கோஸ் 14,சிறிய வெங்காயம் 26, கருனை, மல்லித் தழை 32, டர்னிப் 35, நூக்கல் 25, சுரைக்காய் 6, எலுமிச்சம்பழம் 90 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. பூக்கள் கிலோவில், வரத்து அதிகரிப்பாலும், பங்குனி பொங்கல் திருவிழா நிறைவுற்றதாலும், கடந்த வாரம் 300 க்கு விற்ற மல்லிகை 120 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பிச்சி பூ, கனகாம்பரம் தலா 200, மெட்ராஸ் மல்லிகை 150, கேந்தி பூ 20, அரளி 80, செவ்வந்தி 60, கோழிக்கொண்டை 30, சம்மங்கி 70, முல்லை 200 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *பிப்ரவரி மாதத்தில் தேயிலை ஏற்றுமதி 11 சதவீதம் சரிவு*



*இக்னாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு ஆண்டு பிப்ரவரி மாதத்தில், நாட்டின் தேயிலை ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 11 சதவீதம் சரிவடைந்து 1.19 கோடி கிலோவாக*

குறைந்துள்ளது.

தென் மாநிலங்களில் தேயிலை ஏற்றுமதி அதிகரித்துள்ள நிலையிலும், வட மாநிலங்களில் ஏற்பட்ட பின்னடைவால் ஒட்டுமொத்தத்தில் தேயிலை ஏற்றுமதி குறைந்துள்ளது.

கடந்த 2010–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தென் மாநிலங்களிலிருந்து 48.70 லட்சம் கிலோ தேயிலை ஏற்றுமதியாகி உள்ளது. இது, இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் 9.41 சதவீதம் அதிகரித்து 53.30 லட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது.

இதே மாதத்தில், வட மாநிலங்களில் தேயிலை ஏற்றமதி 22.20 சதவீதம் சரிவடைந்து 84 லட்சம் கிலோவிலிருந்து 66 லட்சம் கிலோவாக குறைந்துள்ளது. இருப்பினும், நாட்டின் தேயிலை ஏற்றுமதியில் வட மாநிலங்களின் பங்களிப்பு 55 சதவீதமாக உள்ளது.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை ஒரேநாளில் 15 காசுகள் சரிவு 210 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல், ஏப்.12–

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை நேற்று ஒரேநாளில் 15 காசுகள் சரிவடைந்து, 210 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை சரிவு

நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் கொள்முதல் விலை நேற்று முன்தினம் 225

காசுகளாக இருந்தது.

இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 15 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். இதன்படி முட்டை விலை 210 காசுகளாக குறைக்கப்பட்டது.

பிற மண்டலம்

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:–

ஐதராபாத்–196, விஜயவாடா, தனுகு–197, பார்வாலா–188, சென்னை–228, மைசூர்–213, பெங்களூர்–215, மும்பை–221, டெல்லி–197, கொல்கத்தா–235.

முட்டைக்கோழி கிலோ ரூ.37–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று நடந்த கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.2 குறைக்க முடிவு செய்தனர். இதன்படி முட்டைக்கோழி விலை கிலோ ரூ.35 ஆக குறைந்துள்ளது. கறிக்கோழி கிலோ ரூ.61 ஆக நீடிக்கிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

காரணம் என்ன?

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், பொதுமக்களிடையே முட்டையின் நுகர்வு குறையத்தொடங்கி உள்ளது.

இதற்கிடையே பிற மண்டலங்களிலும் முட்டை விலை குறைந்து வருகிறது. இதனை கருத்தில்கொண்டு நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

முட்டை விலை கிடுகிடு என சரிவடைந்து வருவதால், பண்ணையாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

## குன்னூர் ஏல மையத்தில் 48 சதவீத தேயிலை தூள் தேக்கம்

குன்னூர், ஏப்.12–

குன்னூர் ஏல மையத்தில் உள்நாட்டு வர்த்தகம் களை கட்டாததால் 48 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்துள்ளது.

தேயிலை ஏலம்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலை தொழிற் சாலைகள் தயாரிக்கும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள தேயிலை ஏல மையத்தில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. ஏலத்திற்கு தொழிற்சாலைகள் தயாரிக்கும் சி.டி.சி. மற்றும் ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் வருகின் றன.

ஏல மையத்திற்கு வரும் தேயிலை தூள் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு

நாட்கள் ஏல மையத்தில் ஏலம் விடப்படுகின்றன. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூள் ஏலம் எடுத்து வருகின் றனர்.

விற்பனை எண் 14–க்கான ஏலம் கடந்த 7,8 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 13 லட்சத்து 60 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 9 லட்சத்து 51 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 9 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந் தது.

மந்த நிலை

ஏலத்தில் ஏற்றுமதி வர்த்தகர்கள் அதிக அளவில் பங்குபெறவில்லை. உள்நாட்டு வர்த்தகமும் மந்த நிலையில் இருந்தது.

இதன் காரணமாக அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 3 ரூபாய் விலை குறைவடைந்தது. 48 சதவீத தேயிலை தூள் விற்பனை யாகாமல் தேக்கம் அடைந்தது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 145 ரூபாய் என்று ஏலம் சென்றது. 58 தொழிற்சாலைகளின் தேயிலை தூள் 100 ரூபாய்க்கு விற்பனையானது. 180 ரூபாய் என்பது ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக இருந்தது. 30 தொழிற்சாலைகள் தங்கள் தேயிலை தூளை 100 ரூபாய்க்கு விற்பனை செய்தன.

சாதாரண வகை

சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 48 ரூபாயில் இருந்து 52 ரூபாய் வரையிலும் விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 130 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 50 ரூபாயில் இருந்து 59 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 135 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.விற்பனை எண் 15–க்கான ஏலம் வருகிற 15–ந் தேதி, 16 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 15 லட்சத்து 11 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

கலவரம்

தற்போது மேற்காசிய நாடு களிலும், மத்திய கிழக்கு நாடு களிலும், உள்நாட்டு கலவரம் ஏற்பட்டு அங்கு இறக்குமதி வர்த்தகம் பாதிக்கப்பட்டு உள்ளது. இதன் எதிரொலியாக தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளும் தேயிலை இறக்குமதியை தவிர்த்து வருகின்றன.

இதனால் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் ஏற்றுமதி வர்த்தகர்கள் அதிக அளவில் பங்குபெறாமல் உள்ளனர். உள் நாட்டு வர்த்தகமே தேயிலை வர்த்தகத்திற்கு கை கொடுக்கும் என்று தேயிலை உற்பத்தியாளர்கள் எதிர் பார்த்து இருந்தனர். ஆனால

இந்த ஏலத்தில் உள் நாட்டு வர்த்தகம் கை கொடுக்காமல் விற்பனையில் மந்த நிலையாக இருந்தது.

தற்போது தேயிலை ஏல மையத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் குறைந்த அளவு உள்ளதால் தேயிலை தொழில் பாதிக்கப் படும் அபாயத்தில் உள்ளதாக தேயிலை உற்பத்தியாளர்களும், தேயிலை விவசாயிகளும் கூறி உள்ளனர்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,740-2,770

**மணிலா பயறு**

80கிலோ கொண்ட மூட்டை 3,600-3,650

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 8,150-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,460-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,826-00

**நல்லெண்ணெய்**

குமாருரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 11,400.00
15கிலோ டின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,145.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,395.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,095.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 570-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஏப்.11-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150,00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64,00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108,00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110,00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67,00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41,00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு (50 கி) | ரூ. 7,100 | 73,00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73,00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38,00 |
| மொச்சை பயிறு (துவரை) | ரூ. 5000 | 52,00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34,00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48,00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66,00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62,00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22,00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35,00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஏப்.11-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 13,020
2. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 17,412
3. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 16,731
4. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 17,294
5. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 17,294
6. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுக ரூ. 23,199

## கோவை உழவர் சந்தை

கோவை,ஏப்.11-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 58-00 | காலிப்பிளவர் | ரூ. | 22-20 |
| கத்தரிக்காய் | ரூ. | 10-14 | பொறியல் தட்டை | ரூ. | 8-10 |
| வெண்டைக்காய் | ரூ. | 15-16 | பச்சை மொச்சை | ரூ. | 28-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5-6 | தேங்காய் | ரூ. | 12-13 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6-7 | பட்டாணி | ரூ. | 50-00 |
| புடலை | ரூ. | 7-8 | பூண்டு | ரூ. | 110-120 |
| பீர்க்கான்காய் | ரூ. | 24-00 | கறிவேப்பிலை | ரூ. | 30-00 |
| சுரைக்காய் | ரூ. | 8-10 | அகத்தி | ரூ. | 14-00 |
| பாகற்காய் | ரூ. | 13-14 | வாழைக்காய் | ரூ. | 17-00 |
| கொத்தவரை | ரூ. | 12-14 | குடைமிளகாய் | ரூ. | 36-00 |
| பூசணிக்காய் | ரூ. | 12-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 18-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 8-10 | டபுள்பீன்ஸ் | ரூ. | 32-36 |
| மேராக்காய் | ரூ. | 18-00 | கறிபீன்ஸ் | ரூ. | 14-16 |
| பச்சை மிளகாய் | ரூ. | 22-00 | புஸ்பீன்ஸ் | ரூ. | 30-32 |
| குண்டு மிளகாய் | ரூ. | 24-00 | காளான் | ரூ. | 80-140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 20-00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 11-00 | மாங்காய் | ரூ. | 28-00 |
| இஞ்சி | ரூ. | 32-00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 15-16 |
| முருங்கைக்காய் | ரூ. | 22-00 | கொய்யா1கிலோ | ரூ. | 24-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 14-15 | மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 20-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-16 |
| கருணைகிழங்கு | ரூ. | 26-00 | வரமிளகாய் | ரூ. | 90-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 23-00 | மாம்பழம் | ரூ. | 70-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 115-00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | சாத்துக்குடி | ரூ. | 36-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 28-00 | நெல்லிக்காய் | ரூ. | 50-00 |
| முள்ளங்கி | ரூ. | 10-00 | ஆரஞ்சு | ரூ. | 50-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 23-00 | வெள்ளரி | ரூ. | 26-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 9-10 | புளி 1 கிலோ | ரூ. | 80-00 |
| நூல்கோல் | ரூ. | 16-00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 34-00 |
| கொத்தமல்லி | ரூ. | 18-20 | அவரை | ரூ. | 12-14 |
| டர்னிப்ஸ் | ரூ. | 16-00 | நிலக்கடலை | ரூ. | 36-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-00 | மக்காச்சோளம் | ரூ. | 3.50-00 |
| காலிகோஸ் | ரூ. | 14-00 | தர்பூசணி | ரூ. | 9-00 |
| புதினா | ரூ. | 14-00 | | | |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஏப்.9-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,500 | 96.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1030 | (-) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1520 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,750 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 58.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,330 | 90.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,060 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,060 | - |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.238.00 | அதிகபட்சவிலை | ரூ.273.00 |
| சராசரி விலை | ரூ.217.71 | சராசரி விலை | ரூ.252.92 |
| குறைந்தபட்சவிலை | ரூ.161.00 | குறைந்தபட்சவிலை | ரூ.226.00 |

**பட்டு நூல் ரூ.1,873**

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.23300 |
| மிளகு (சேட்டன்) | ரூ.23500 |
| மிளகு (வயநாடன்) | ரூ.24500 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 9200 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 9200 |
| சுக்கு(புதியது) | ரூ.15000 |
| சுக்கு(பழையது) | ரூ.10000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10100 |
| கொப்பரை நாடன் | ரூ.6650 |
| கொப்பரை ராசு | ரூ.6500 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6800 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ.7250 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6850 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 23350 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23750 |
| ரப்பர் பால் | ரூ. 18850 |
| காப்பி | ரூ. 9700 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2500 |
| நேந்திரகாய் | ரூ. 1400 |
| இஞ்சி | ரூ. 1300 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,840,00 | 15808,00 | 15840,00 |
| ஒரு கிராம் | 1,980,00 | 1,976,00 | 1,980,00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 61,490,00 | 65,400,00 | 66,000,00 |
| ஒரு கிராம் | 65,80 | 65,40 | 66,50 |

தினகரன்

## முட்டை விலை 15 காசு குறைப்பு

பதிவு செய்த நாள் 4/12/2011 1:38:29 AM



நாமக்கல் : நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பண்ணையாளர், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், வெப்பம் காரணமாக தமிழகம், கேரளாவில் முட்டை விற்பனை குறைந்துள்ளது. எனவே விற்பனையை அதிகரிக்க விலையை குறைக்க வேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, முட்டை விலையில் 15 காசுகள் குறைக்கப்பட்டு ஒரு முட்டை பண்ணை கொள்முதல் விலை 210 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு கிலோ முட்டை கோழி விலை ஶி37 ஆகவும், ஒரு கிலோ கறிகோழி விலை ஶி61 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.